Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 | தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; சங்.139:17 | அக்டோபர் 2018 No.10

## நமக்கு தூய ஆவியானவரின் மிகப்பெரிய தேவை

***Our great need of the Holy Spirit***

Wesley L. Duewel

*"………. ஆவியினால் நிறைந்து ….." எபே.5:18.*

நீங்கள் ஆவியானவரையே சார்ந்து வாழவேண்டியவர்கள் என்பதை மறந்து வாழ்வது ஆபத்தானது. தூய ஆவியானவர் உங்களிலும் உங்கள் மூலமாகவும் தெய்வீக பலத்த ஊழியத்தை செய்ய விரும்புகிறார் என்பதை எளிதில் மறந்துவிடுகிறீர்கள். தூய ஆவியால் அருளப்பட்ட கிருபையின் வல்லமையின்றி நீங்கள் தேவனுக்காக வாழவோ செயல்படவோ முடியாது.

நீங்கள் அர்ப்பணமுள்ள ஆவிக்குரிய கிறிஸ்தவனாயிருந்தாலும் கடந்த அனுபவங்களை சார்ந்து வாழ ஆரம்பிக்கலாம். உடன் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ நிறுவனங்கள் அல்லது உங்கள் சொந்த முயற்சி, வழிமுறைகளின் உதவியை சார்ந்து வாழும் சோதனை ஏற்படலாம். உங்கள் சொந்த அனுபவம், முதிர்ச்சி போன்றவற்றையும் சார்ந்து கொள்ளலாம். ஆனால் தூய ஆவியானவரின் தேவை அடிக்கடி நினைப்பூட்டப்பட வேண்டும்.

### தொடர் ஊழியம்

உங்கள் ஊழியத்தில் ஆவியானவரின் வல்லமையும் அளவும் உணரப்படாமலிருக்கலாம். அவர் கிருபையாலும், வல்லமையாலும் அதிசயங்களைச் செய்கிறவர். அப்போதெல்லாம் நாம் தேவ பிரசன்னத்தாலும் அவரது கிரியையாலும் பிரமிப்படைகிறோம். ஆனால் ஆவியானவரின் முக்கிய பணி வியப்படையச் செய்வதும், தாக்கமடையச் செய்வதுமல்ல. தொடர்ந்து நிரப்பப்படுவதும், தூய்மைப்படுத்தப்படுவதும், அபிஷேகிப்பதும், வல்லமைப்படுத்தி வழிநடத்துவதும், கனி தரும் வாழ்வை தருவதுமே முக்கியமானவை. இவ்வித ஊழியமின்றி ஆவியின் வாழ்வை செயல்படுத்தக்கூடாது. நீங்கள் பெலவீனமும், பயனற்றவர்களும் கனியற்றவர்களுமாகி விடுவீர்கள்.

### வெற்றியும் பிரகாசமும்

தூய ஆவியானவர் மட்டுமே வாழ்வில் வெற்றியும் பிரகாசமும் தருபவர். அவர் மட்டுமே நம்மை நிரப்பக்கூடியவர். அதன் மூலம் வல்லமையை அளிக்கிறார். அவர் நமது வாழ்வில் முற்றிலும் ஆண்டவராயிருந்தால் மட்டுமே சோதனை மேல் வெற்றியும் பெலனும் பெறக்கூடும். வல்லமையுள்ள தேவன் நம்மில் வாழ்வதும் அவரது மாற்றுருவாக்கும் ஆளுமையும் உள்ளான தொடர் ஊற்றப்படுதலும் இன்றியமையாதவை.

### பயனுள்ள ஊழியம்

மறுபடியும் பிறந்தவர்களைக் கொண்டு ஊழியங்களை நிறைவேற்றுவது தேவனுடைய எதிர்பார்ப்பு. நாம் அனைவரும் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆவியானவரே மிகப்பெரிய சாட்சி. அவர் நம்மில் வாசம் செய்யாவிடில் நாம் சாட்சியாயிருக்க முடியாது. சாட்சியாயிருக்க தூய ஆவியானவரின் அபிஷேகம் வேண்டும். ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வு கிறிஸ்துவின் வாழ்வைப் போன்றதாகவும், அழகியதாகவும், தூய்மையானதாகவும் வல்லமை நிறைந்ததாகவுமிருக்கும். அதனால் மற்றவர்கள் உங்களைக் கிறிஸ்துவினுடையவர்கள் என்று கண்டு கொள்வார்கள். அத்தகைய ஒரு வேறுபாடு உங்களுக்கு வேண்டும்.

ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் தங்கள் உதடுகளாலும் சாட்சியாயிருக்க வேண்டும். உங்களோடு பணிபுரிகிறவர்கள் உங்களிலுள்ள வேறுபாட்டைக் காணவேண்டும். உங்கள் சாட்சியை நீங்கள் மறைத்து வைக்க முடியாது.

உங்கள் மூலமாக சிலர் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வரலாம். சிலர் கோபமடையலாம். ஏனெனில் அவர்கள் சரியான சாட்சிகளாயிருப்பதில்லை.

### ஜெபத்தில் உதவி

ஆவியானவரின் ஊழியத்தோடு ஜெப ஊழியத்தையும் தேவன் எதிர் பார்க்கிறார். நியாயத்தீர்ப்பு நாளிலே பிறருக்காக நீங்கள் எப்படி ஜெபித்தீர்கள்? எவ்வளவு ஜெபித்தீர்கள் என்பதற்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். தூய ஆவியானவரின் ஆளுகைக்குள் இருந்தால் மட் டுமே ஜெப ஊழியத்தை நிறைவேற்ற முடியும்.

யாருக்காக நீங்கள் ஜெபிக்க வேண்டும் என்பதற்கான வழிநடத்துதலை தருபவர் தூய ஆவியானவர். எல்லா நாளும் எல்லாருக்காகவும் ஜெபிக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் நீங்கள் யாருக்காக ஜெபிக்க வேண்டும் என்பதை ஆவியானவரே அறிவார். நீங்கள் ஒரு அட்டவணையை வைத்திருந்தாலும் ஆவியானவர் உங்கள் கவனத்தை தேவைப்பட்ட ஒருவர் மீது செலுத்தி ஜெபிக்கச் செய்வார். நீங்கள் வெவ்வேறு காரியங்களில் ஈடுபட்டிருந் தாலும் நீங்கள் ஆவியானவரின் ஆளுகைக்குட்பட்டிருந்தால் குறிப்பிட்ட நேரத்தில் ஜெபிக்க நடத்துவார்.

உத்தம கரிசனையோடு ஜெபிக்க ஆவியானவர் உங்கள் உத்தமத்தையும், அன்பையும் ஆழப்படுத்த வேண்டும். அப்போதுதான் நாம் ஜெபத்தில் போராட முடியும். உண்மையான விசுவாசத்தை நம்மில் அளித்து தேவனுடைய வாக்குகளை பெற்றுக்கொள்ளும்வரை விடாப்பிடியாக ஜெபித்து வெற்றிபெற தூய ஆவியானவர் துணை செய்ய வேண்டும்.

### எல்லாத் தேவைகளுக்கும் மேலானது

நீங்கள் பேசுவதற்கும், ஜெபிப்பதற்கும், எதையும் செய்வதற்கும் ஒவ்வொரு நாளும் தூய ஆவியானவரே ஒத்தாசை செய்கிறார். அவரது மாற்றுருசெய்யும் கிருபை, பிரகாசமான அழகு, சத்துவத்தின் வல்லமை ஆகியவைகளின்றி ஒருநாள்கூட நாம் வாழ முடியாது. எனவே எல்லா தேவைகளுக்கும் மேலாக அவர் நமக்கு மிகவும் தேவையானவர்.

நமது தனிப்பட்ட வாழ்விலும் அவர் தேவையானவர். நமது ஊழியத்திலும், இல்லங்களிலும், சபைகளிலும் அனைத்து நிறுவனங்களிலும் அவர் இன்றியமையாதவர்.

நாம் கேட்டால் அவர் நமக்குக் கொடுக்கப்படுவார் (லூக்.11:13) அவரை நாம் வரவேற்று ஏற்றுக்கொண்டால் உங்களோடிருந்து முற்றிலுமாகவும், சுயாதீனமாகவும் செயல்படுவார். உங்களை முழுவதுமாக அவருக்கு அர்ப்பணித்தால் உங்கள் வாழ்வின் முழுப் பொறுப்பையும் அவர் எடுத்துக் கொள்வார். அவருக்குக் கீழ்ப்படிந்தால் அவர் உங்களை அபிஷேகித்து பயன்படுத்துவார். அவர் குமாரனாகிய தேவனால் உங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டவர். பிதாவாகிய தேவனால் உங்களுக்கு அருளப்பட்டவர். அவர் உங்களில் வந்து உங்களை முற்றிலுமாக நிரப்பட்டும். அவரே உங்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கட்டும். அவர் ஆவியாகிய தேவன். அவர் உங்கள் தேவைகளையெல்லாம் சந்திக்க விருப்பமுடையவர். அவரே இவ்வுலகில் உங்களுக்கு மிகவும் தேவையானவர்.

தூய ஆவியானவரே நீர் எங்களில் வந்து எங்களை அதிகம் அதிகமாக நிரப்பும்.

"And I sought for a man….. stand in the gap before me for the land, that I should not destroy it: but I found none" Eze.22:30

**THE ANDAMAN & NICOBAR ISLAND**

*Pastor's Fellowship Organizes*

**HEART - CRY FOR REVIVAL 2018**

(7 Hours Fasting Prayer)

Friday: **19.10.2018,** 3rd Friday, 10am to 5 pm
**Jubilee Hall, Bishop House,**
Dairy Farm, Port Blair, Andaman

Saturday: **20.10.2018,** 3rd Saturday, 10am to 5 pm
**Wright Myo Panchayat Hall,**
Wimberlygunj, Andaman

Message: **Bro. Wesley Devadason**
Editor, Varukayin Thoothan, Nagercoil

Prayer: **NIMS Missionaries,** Gujarat
**IEM Missionaries,** Tamilnadu

*For Contact:* **Pr. Ebenezer, A.G.Church, 94342 60225**
**Pr. Lawrence, Siswa Church, 99332 50072**
**Pr. Dasarath, Shiloh Church, 94342 71626**

# வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
**Mobile:** 95432 21008 **e.mail:** varukayinthoothan@hotmail.com
**வங்கி கணக்கு :** VARUKAYIN THOOTHAN, A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006


## இம்மாத பொன்னான சிந்தனை

எலியா "நம்மைப் போல் பாடுள்ள மனுஷனாயிருந்தான்" என்று நாமறிவோம் யாக்கோபு 5:17. **ஆனால் அந்தோ! நாம் அவனைப் போல் ஜெபிக்கும் மனிதராய் இல்லை. ஜெபிக்கும் ஒரு மனிதன்** (மனுஷி) **தேவனுக்குப் போதும்.**

## வாக்குத்தத்தம்

...... தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; ஏசாயா 38:5.

## எழுப்புதலுக்காக ஜெபிக்கிற 100 பேர் - Revive 100

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,**

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

அக்டோபர் மாத தூதனுக்காக என் ஆண்டவரை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். **முதலாவது சில வாசகரின் கடிதங்களை கீழே அச்சிடுகிறேன்:**

*Respected Sir,* 27.08.2018

இத்துடன் ரூ.1000/-க்கான Cheque TMB No.:01028564 dt.27.08.2018 இணைத்துள்ளேன். நீண்ட காலம் சந்தா அனுப்பத் தவறி விட்டேன் மன்னிக்கவும். இதைப் பத்திரிகைப் பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளவும். பத்திரிகை மிகவும் ஆவிக்குரிய பயனுள்ளதாயுள்ளது. தொடர்ந்து அனுப்பி வைக்குமாறு பணிவாய் வேண்டுகிறேன். தங்களின் ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறேன். நன்றி.

கர்த்தருக்குள் அன்புள்ள, சகோ. S.S., பத்திரிகை No. TC 00620Y

* * * * *

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரருக்கு 20.08.2018

11.08.18 அன்று கீழ்காணும் முகவரியிலிருந்து ரூ.5000/- தங்களுக்கு மணியாடர் மூலம் அனுப்பியுள்ளேன். அதனை அந்தமான் ஊழியத்தின் ஒருவழி பயணச் செலவிற்காக பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதனை எனது தாயார் தங்களுக்கு அனுப்பும்படி சொன்னதால் திருச்சியிலிருந்து அனுப்பியுள்ளேன். அதற்கான ரசீது மற்றும் தபால்களை கீழ்காணும் எனது தாயாரின் முகவரிக்கு அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கிறிஸ்துவின் பணியில் P.L.

* * * * *

**இரண்டாவதாக சில அறிவிப்புகளை கீழே எழுதுகிறேன்:**

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போதெல்லாம் உங்கள் பத்திரிகை பதிவு எண்ணை எழுத மறவாதேயுங்கள். அலுவலக பணியில் அது நீங்கள் எங்களுக்குச் செய்யும் பெரிய உதவியாகும்.

அதுபோல உங்கள் **தொலைபேசி** எண்ணை கண்டிப்பாய் எழுதுங்கள். ஒன்றிரண்டு காரணங்களை கீழே எழுதுகிறேன்:

நம்முடைய வாசகர்கள் வாழ்ந்து சுகமாயிருப்பார்கள். (3 யோவான் 2 பார்க்க) ஆனால் No such Addressee 'இப்படி ஒரு விலாசதாரர் அங்கே இல்லை' என்று எழுதப்பட்டு உங்கள் பத்திரிகை எங்களுக்கே திரும்பவரும். உங்கள் தொலைபேசி எண் எங்களிடம் இருந்தால் உடனே உங்களோடே தொடர்பு கொள்ளமுடியும்.

நீங்கள் ஒரு கடிதமோ, காணிக்கையோ, காசோலையோ அனுப்பினால் தொலைபேசி வழியாக உடனே உங்களை தொடர்பு கொள்ள அது வசதியாயிருக்கும். தொலை தொடர்பு மிகவும் முக்கியமான இந்த நாட்களில் தயவுசெய்து உங்கள் தொலைபேசி அல்லது அலைபேசி எண்ணை எங்களுக்கு தொலைபேசி வழியாக தெரிவியுங்கள், நன்றி. இந்த ஆண்டு இறுதிக்குள் வாசகர் முகவரிகள் யாவற்றிலும் தொலைபேசி எண்ணை இணைக்க விரும்புகிறோம்.

மூன்றாவதாக, இந்த மாத பத்திரிகையை **எழுப்புதலுக்காக ஜெபிக்கிற 100 பேர் (Revive 100)** விசேஷ இதழாக வெளியிடுகிறோம். (கர்த்தருக்கு சித்தமானால் நவம்பர் **Pray 70**, டிசம்பர் **Mission 300** இதழாக வெளிவரும்)

### எழுப்புதல் என்றால் என்ன?

*ஏசாயா 64:1-3* ஆ, உமது நாமத்தை சத்துருக்களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்கு முன் தத்தளிப்பதற்கும்,

தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப்போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்.

நாங்கள் எதிர்பார்த்திராத பயங்கரமான காரியங்களை நீர் செய்தபோது, நீர் இறங்கினீர், உமது சந்நிதியில் பர்வதங்கள் உருகிப்போயின.

### உதாரணம்

*1 இராஜாக்கள் 18:38,39* அப்பொழுது கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது.

ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்.

### நோக்கம்

*18:36,37* ...... தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப் பண்ணும்.

கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான் (தீர்க்கதரிசியாகிய எலியா)

அக்கினி இறங்க வேண்டும்
அற்புதம் நடக்க வேண்டும்
கர்த்தரே தெய்வம் என்று
ஜாதிகள் முழங்க வேண்டும்

தேசத்தின் ஜனங்கள் காக்க
திறப்பின் வாயில் நிற்க
தேவன் தேடும் மனிதர்
நம்மில் யார்தான் உண்டு

இந்தியாவில் இயேசு நாமம்
இன்றே கூற வேண்டும்
இந்தியர்கள் பரலோகத்தின்
பாக்கியவான்களாய் மாற்றும்

(8-ம் பக்கம் பார்க்க)

### அந்தமான் ஊழியங்களுக்காய் ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 17.10.2018 | 10.00 - 1.00 | ஆயத்த உபவாச ஜெபம் |
| 18.10.2018 | 10.00 - 1.00 | ஆயத்த உபவாச ஜெபம் |
| 19.10.2018 | 10.00 - 5.00 | 7 மணி நேர உபவாச ஜெபம் |
| 20.10.2018 | 10.00 - 5.00 | 7 மணி நேர உபவாச ஜெபம் |
| 21.10.2018 | ஞாயிறு ஆராதனை | உபவாசித்து அப்.13:2 |

| உபவாச ஜெபம் | முன்னேற்றப்பணி |
|---|---|
| WESLEY DEVADASON | WESLEY DEVADASON |
| A/c. No.: 370601000002557 | A/c. No.: 61822200136904 |
| I.O.B., Court Road, Nagercoil-1 | Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1 |
| IFSC Code : IOBA0000063 | IFSC Code : SYNB0006182 |

# நமக்கு அளிக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளுதல்

***Walk worthy of our calling***

Rich Carmicheal

அப்போஸ்தலனாகிய பவுல் பகிர்ந்து கொள்ளும் மகிமையான ஒரு சத்தியம் கிறிஸ்து மரித்தோரிடத்திலிருந்து எழுந்தார் என்பதும், "எல்லா துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்" எபே.1:20-22 என்பதுமாகும்.

இதற்கு மேலாக காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கட்டப்பட வேண்டும் எபே.1:9. அந்த நாளைக் குறித்து H.A. அயன் சைட் என்பவர் "கிறிஸ்தவமனைத்தும் அழிக்கப்பட்டு, கிறிஸ்துவின் அதிகாரம் பரத்திலும், பூலோகமெங்கும் நிலை நிறுத்தப்படும் அந்தநாள் எவ்வளவு அற்புதமானது!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாம் ஏற்கெனவே கிறிஸ்துவை அறிந்திருப்பதும் அவருக்குச் சொந்த மானவர்களாயிருப்பது எவ்வளவு நல்லது! கிறிஸ்துவின் நித்திய மகிமைக்கு நாம் பங்காளிகள். "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்" 2:5-7. வருங்கால மகிமைக்கு நாம் சாட்சிகள் மட்டுமல்ல, "உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும்."

இந்த அழைப்பு மிகப்பெரியது. உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே இது அவருடைய அநாதி திட்டமாயிருந்தது. "....... அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்" 1:4. அவர் நம்மை 'முன்குறித்திருக்கிறார்' 1:6. தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானம் 1:12. "...... நற்கிரியைகளை நாம் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" 2:10. அவரது கிருபை இத்தகைய அற்புதமான இரட்சிப்புக்கு நம்மை வழிநடத்தி இன்றும் என்றும் அவருக்காக வாழும் சிலாக்கியத்தை நமக்குத் தந்திருப்பதால் அவரைத் துதிப்போம்.

### கிறிஸ்துவுக்கு எல்லாவற்றிலும் கடமைப்பட்டவர்கள்

அவர் நமது இரட்சகர் 5:23. "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" 1:7. அவரது அன்பு மிகப்பெரியது; அறிவுக்கெட்டாதது 3:18-19. அவரது மகாப்பெரிய அன்பினால் தம்மை காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்தார்" 5:2.

முன்பு நாம் கிறிஸ்துவைச் சேராதவர்களும், நம்பிக்கையற்றவர்களும் தேவனற்றவர்களுமாயிருந்தோம் 2:12,13. இப்பொழுது கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டோம் 2:13. அவர் நமது சமாதானம் 2:14. சிலுவை மரணத்தினாலே இரு திறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் 2:16. "........ நாம் இரு திறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய் பெற்றிருக்கிறோம்" 2:18; 3:12. "....... பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்" 2:19-20.

அவர் வாக்குப் பண்ணியது போல தமது சபையைக் கட்டுகிறார் மத்.16:18. "அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" எபே.2:22. அவர் சரீரத்தின் தலை, சரீரத்தின் அவயவங்களாகிய நம்மை அவர் போஷித்து பராமரிக்கிறார் 5:23, 29. அது மட்டுமின்றி "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்ள தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" 5:26-27. கிறிஸ்துவின் ஈவின் அளவுக்குத்தக்கதாக ஆவிக்குரிய வரங்களைத் தருகிறார் 4:7. நாம் வாழவேண்டிய பாதையை நமக்குப் போதிக்கிறார் 4:21. அவர் ஒளியின் ஆதாரமாய் இருக்கிறார் 5:14.

அவரது ஐசுவரியம் அளவற்றது. நமது வாழ்வின் விலையேறப்பெற்ற பணிகளுக்கு அவர் ஆதாரம். அவரால் நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் 1:4. நாம் சுவிகாரப் புத்திரராகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் 1:6. அவரோடு கூட உயிர்ப்பித்து உன்னதங்களில் உட்காரச் செய்தார் 2:6,7. "அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" 1:3.

### கிறிஸ்து நமக்குள்ளே வாசம் செய்தல்

அப்போஸ்தலனாகிய பவுலின் ஜெபத்தைப் படியுங்கள் எபே.3:14-19. அவருடைய ஆவியினால் மட்டுமே நமது வாழ்வும் ஊழியமும் பலப்பட முடியும். உள்ளான மனுஷனில் நாம் வல்லமையாய் பலப்பட முடியும். கிறிஸ்து நமது உள்ளங்களில் வாசம் செய்து, தேவனுடைய பரிபூரணத்தினால் நாம் நிரப்பப்பட்டால் மேற்கூறிய ஜெபம் நம்மில் பெலன் செய்யக்கூடும்.

கிறிஸ்து நமது ஜீவன்! கலா.2:20-ல் "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்: ............ இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். ....... தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" என்று பவுல் எழுதுகிறார்.

### அவரது வல்லமை நம்மில் கிரியை செய்கிறது

கர்த்தருடைய பிரசன்னம் நமது வாழ்விலிருக்கும்போது அவரது வல்லமை நம்மில் கிரியை செய்கிறது 3:20. அந்த வல்லமை நாம் அறிந்து கொள்ள முடியாதது 1:17-20. இந்த அளவற்ற வல்லமை உயிர்த்தெழுதலில் வெளிப்பட்டு கிறிஸ்துவை உயர்த்தி அவர் நம்மில் கிரியை நடப்பிக்கச் செய்கிறது. இந்த வல்லமை அளவற்றது. எனவே பவுல் "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் கிரியை செய்கிற வல்லமையின்படியே வல்லவராகிய அவருக்கு ........ மகிமை உண்டாவதாக. ஆமென்" என்று ஜெபிக்கிறார் 3:20,21.

### கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் வாழ்வின் அடையாளங்கள்

மேற்கூறிய சத்தியங்களை மனதிற் கொண்டவராக பவுல் 'அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளுங்கள்' என்று எழுதினார். தேவனுக்கு நாம் சொந்தமானவர்கள். நமது வாழ்வு அவரது ஆவியாலும் வல்லமையாலும் பலப்படுத்தப்பட்டு கிறிஸ்துவுக்கு மகிமையை எப்போதும் கொண்டு வரவேண்டும். இத்தகைய ஒரு வாழ்வுக்கு நம்மை முற்றிலுமாக அர்ப்பணிப்போம்.

### நிர்வாக வசதிக்காக

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

# அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை

***The power of His resurrection***

A.B. Simpson

ஒருவர் உயிரோடெழும்பும்போது அவர் ஒன்றும் இல்லாமையிலிருந்து உருவாகிறார், மரணத்திலிருந்து ஜீவனுக்கு வருகிறார். இந்த மாற்றம் முடிவற்றது. ஒரு உத்தம கிறிஸ்தவன் உயிர்ப்பிக்கப்பட்டவன்.

சுவிசேஷத்தின்படி நாமாகவே நன்மை செய்யக்கூடாதவர்கள். உதவியற்ற நிலையில் நாம் கல்லறைக்குள் தள்ளப்படுகிறோம். ஒன்றுமில்லாமலாக்கப்பட்ட நாம் புதிய வாழ்வுடன் எழுப்பப்படுகிறோம். இந்தப் பிறப்பு தெய்வீகமானது. பரலோக ஆதாரங்களால் செயல்படுத்தப்படுகிறது.

கிறிஸ்தவ வாழ்வு சுயமாக நம்மை நலமாக்குவது அல்ல, அது முற்றிலும் இயற்கைக்கு மேலானதும் தெய்வீகமானதுமாகும். மரணமின்றி உயிர்த்தெழுதலில்லை. மரணத்தின் அளவு போல உயிர்த்தெழுதலின் வல்லமையுமிருக்கும். மரணத்திற்கு விட்டுக்கொடுப்பதால் நாம் எதையும் இழப்பதில்லை. நாம் வெளியே வராவிட்டால் உள்ளே செல்ல முடியாது. நாம் அவரோடு கூட மரித்தோமானால் அவரோடு பிழைத்துமிருப்போம்.

“நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்” கொலோ.3:1. ஏற்கெனவே நாம் மரித்து, உயிர்த்தெழுந்துவிட்டோம். எனவே பவுல் நாம் கிறிஸ்துவோடு வாழ அழைக்கிறார். “நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது” கொலோ.3:3.

நான் உயிரோடிருக்கும்போது என்னை எப்படி மரித்தவனாக நிரூபிக்க முடியும்? அல்லது தாழ்வான நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் நான் எப்படி உயிரோடெழுந்துவிட்டேன் என்று சொல்லமுடியும்? என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் இதை ஒத்துக் கொள்ளாமல் பழைய வாழ்க்கையிலேயே இருப்பதால் வெற்றி பெறமுடியவில்லை.

**நமது விசுவாச அளவின்படியே பெற்றுக்கொள்வோம்**

நமது ஆத்துமாவின் கல்லறையில் எழும்பும் பிசாசுகளை அமுக்கிவிடுவது விசுவாசம். ஆனால் சந்தேகத்தின் ஆவி அவைகளை எழுப்பி நீங்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்குமட்டும் உங்களைத் திணறச் செய்யும். நீங்கள் மரிப்பதற்காகச் செய்ய வேண்டிய ஒரே காரியம் உங்களைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து அவரோடு மரித்து விட்டதாக ஒப்புக்கொள்ளுங்கள்.

கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்படும்படியாக உங்களை அர்ப்பணியுங்கள். பழைய வாழ்வினை விட்டு விடுங்கள். பரத்திலிருந்து பிறந்தவர்கள் போலவும் தேவனால் மட்டும் நடத்தப்படுகிறவர்கள் போலவும் நடவுங்கள். திடீரென சில பழைய தீய குணங்கள் மறுபடியும் வெளிப்படும். அப்படியானால் நாம் இன்னும் மரிக்கவில்லை. அவைகளுக்கு இடங்கொடுத்தால் அவை உங்களைக் கட்டுப்படுத்தி, மறுபடியும் உங்களைப் பழைய நிலைக்குகொண்டு சென்றுவிடும்.

ஆனால் நீங்கள் அவற்றை மறுத்து, “இவை சாத்தானுடைய பொய்; நான் பாவத்திற்கு மரித்துவிட்டேன்; இவை சாத்தானின் பிள்ளைகளுக்குரியவை, எனவே அவற்றைக் கடிந்து புறந்தள்ளுகிறேன்” என்று கூறினால் தேவன் அவைகளிலிருந்து உங்களைப் பிரித்தெடுத்து அவைகளை அழிப்பார். அவை உங்களுடையவை அல்ல, ஆனால் சாத்தான் கொண்டுவரும் சோதனைகள் மட்டுமே என்று கண்டுகொள்வீர்கள்.

*நீதி.23:7*-ன் படி “அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.” நமது நினைவுகள் நமது உண்மை வாழ்வில் பிரதிபலிக்கின்றன. விசுவாசத்தின் இந்த நியதி தனிப்பட்ட நீதி, பரிசுத்தம் ஆகியவற்றிற்கு அடிப்படையாயிருக்கிறது.

**அதற்கு ஏற்றபடி வாழுவோம்**

நமது மனநிலை நமது நோக்கத்தை பாதிக்கும். உயர்குலத்தில் பிறந்த ஒரு குழந்தை தனது உயர்குல அந்தஸ்தைக் குறித்த உணர்வுடையதாயிருக்கும். அதுபோல பரலோக உயர்வான தரத்தைக் குறித்த உணர்வுடையவர்கள் தேவ ராஜ்யத்தின் பிள்ளைகளாக நடந்து கொள்வார்கள்.

*கொலோ.3:9-10; எபே.4:22-25* வசனங்களின்படி நாம் பழைய மனிதனைக் களைந்துபோட்டு, புதிய மனிதனைத் தரித்துக் கொண்டவர்கள். நாம் ராஜாக்களும், ஆசாரியர்களுமாயிருப்பதால் பிச்சைக்காரரின் வஸ்திரங்களைக் களைந்துவிட்டு ராஜவஸ்திரங்களைத் தரிக்க வேண்டும். புதிய மனிதனை நாம் தரித்துக் கொள்வோம். எனவே இரக்கம், தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை போன்ற பூரணமான ஆடைகளைத் தரித்துக் கொள்வது அவசியம். எல்லாவற்றிலும் சிறந்த அங்கி கிறிஸ்துவே. அவரையே நாம் தரித்துக் கொள்வோம். இவ்வாறான உயிர்த்தெழுதலின் வாழ்வினை செயல்படுத்துவோம்.

**செயல்முறையான வல்லமை**

நாம் கிறிஸ்துவுடனே எழுந்தவர்கள். நமது நம்பிக்கையும், இரட்சிப்பின் நம்பிக்கையும் உறுதிப்படுத்த இதற்கு முதன்மையாக வல்லமையுண்டு. ஏனெனில் இயேசுவின் உயிர்த்தெழுதல் பாவ நிவாரணம் செலுத்தப்பட்டுவிட்டது என்பதற்கு உறுதியான சான்றாக இருக்கிறது.

இயேசு கல்லறையிலிருந்து வெற்றியோடு வெளியேறியபோது அவர் உலகில் வந்த நோக்கம் நிறைவேறி விட்டது என்றும், முடிவற்ற அந்த பாவ நிவாரணத்தால் பிதாவும் திருப்தி அடைந்துவிட்டார் என்றும் உலகம் அறிந்து கொண்டது. ஆக விசுவாசம் அவரது உயிர்த்தெழுதலை நித்திய அஸ்திபாரமாகக் கொண்டு நிற்க முடியும். “ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறார்” ரோமர் *8:34*.

**கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்மை சுத்திகரிக்கும் வல்லமையுடையது:-**

அது நமது பழைய வாழ்வு, முந்திய சுயம் ஆகியவற்றை இல்லாமலாக்குவதால் நாம் தேவனுடைய பார்வையிலும் நம்முடைய பார்வையிலும் பழைய மனிதரல்ல. எனவே நமது பழைய தீய தன்மைக்கு கீழ்ப்படியவோ பயப்படவோ செய்யாமல் உறுதியுடனிருக்க முடியும். உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மில் வாசம் செய்து, புதிய வாழ்வின் வல்லமையாயிருந்து வெற்றியையும் கீழ்ப்படிதலையும் அளிக்கிறார்.

உயிர்த்தெழுதல் மட்டுமல்ல உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஐக்கியம் வெற்றியையும் வல்லமையையும் தருகிறது. நாம் சிலுவையில் கிறிஸ்துவுடன் அறையப்பட்டுவிட்டபடியால் நாம் அல்ல இனி கிறிஸ்துவே நம்மில் வாழுகிறார். இதுவே உயிர்த்தெழுந்த கிறிஸ்து விசுவாசத்தோடு கீழ்ப்படியும் ஒரு ஆத்துமாவில் வாசம் பண்ணும் அனுபவம்.

**உயிர்த்தெழுதலின் வல்லமை நம்மைக் குணமாக்கும்**

உயிர்த்தெழுதலின் காலையில் கல்லறையிலிருந்து மாம்ச சரீரத்துடன் கிறிஸ்து வெளியே வந்தார். அவரது சரீரம் நமது சரீரங்களுக்குத் தலை. அதுவே நமது மாம்ச பெலனுக்கும் ஆவிக்குரிய வாழ்விற்கும் ஆதாரமாயிருக்கிறது. நாம் அவரை ஏற்றுக்கொண்டு, அவரை நம்பினால் நமது சரீரத்திற்கும் ஆவிக்கும் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் செய்வார். நாம் புதிதும் இயற்கைக்கு மேலானதுமான பெலனை நமது மண்பாண்டமான சரீரத்திலும், எதிர்கால உயிர்த்தெழுதலிலும் பெறுவோம்.

**கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமது விசுவாசத்தை வலுப்படுத்தி நமது ஜெபங்களுக்கு பதில் பெற்றுக்கொள்ள உற்சாகப்படுத்தவும் கடினமான காரியங்களை தேவனிடம் கேட்கவும் ஏதுவாகிறது:-**

கல்லறையை மூடியிருந்த பெரிய கல் உருட்டப்பட்டு கல்லறை திறக்கப்பட்ட பின் கூடாத காரியம் எதுவுமில்லையே! நமக்கு நேராக தேவனுடைய மகத்தான வல்லமையை நமக்குப் போதிக்க தேவன் விரும்புகிறார் எபேசி.*1:19-22* வாசிக்க. நாம் எதையும் தேவனிடம் கேட்க கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் உரிமை சாசனமாயிருக்கிறது.

**ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதல் உண்மையான சேவைக்கு வல்லமையளிக்கிறது:-**

அவரது உயிர்த்தெழுதலின் சாட்சி மனிதரின் இரட்சிப்புக்கு தேவ வல்லமையாக தூய ஆவியானவரால் பயன்படுத்தப்படுகிறது. ஆதி அப்போஸ்தலரின் ஊழியத்தில் அதுவே முக்கிய பொருளாயிருந்தது. அவர்கள் எப்போதும் இயேசுவைக் குறித்தும் அவரது உயிர்த்தெழுதலைக் குறித்தும் பிரசங்கித்தார்கள். கிறிஸ்தவ வாழ்விற்கும், பணிக்கும் அது விசேஷித்த பிரகாசத்தையும் கவர்ச்சியையும் அளிக்கிறது.

துக்கமும், பாவமும் நிறைந்த இன்றைய உலகுக்கு உயிர்த்தெழுதலின் செய்தி இன்றியமையாதது. கிறிஸ்தவர்களில் வாசம் செய்யும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமை காணப்பட்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டால் உலகமக்களை அதிகமாக இரட்சிப்பிற்குள் வழிநடத்த முடியும்.

**கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வாழ்வின் கடினமான பகுதிகளை சந்திக்கவும் கசப்பான சோதனைகளை சகிக்கவும் உதவி செய்கிறது:-**

பிலிப்பியர் நிருபத்தில் அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை அவருடைய பாடுகளோடு நம்மை இணைப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. உயிர்த்தெழுதலின் வாழ்வு அவரோடும் அவருக்காகவும் பாடுபட நம்மை வலுப்படுத்துகிறது.

அவர் பிறருக்காக பாடுபட்டார். அவரது உயிர்த்தெழுதல் அவரது மேன்மையானதும் தூய்மையானதுமான பாடுகளை (சபைக்காகவும் உலகுக்காகவும்) அவரோடு பகிர்ந்து கொள்ளச் செய்கிறது. எனவே இந்நிருபங்கள் உன்னதங்களுக்கு நம்மை உயர்த்தி மறுபடியும் சாதாரண கடமைகளுக்கு இறங்கச் செய்கிறது.

எபேசியருக்கும், கொலோசெயருக்கும் எழுதப்பட்ட நிருபங்கள் விசுவாசம் வல்லமை ஆகியவற்றின் உன்னத நிலைகளைக் குறித்துப் பேசுவதோடு, மனிதருக்கு ஏற்படக்கூடிய சாதாரண சோதனைகளைக் குறித்தும், கணவன், மனைவி ஆகியோரின் கடமைகள், நேர்மையின் அவசியம், உத்தமம், நீதி ஆகிய அனுபவங்களைக் குறித்தும் குறிப்பிடுகின்றன.

உபத்திரவத்தில் மகிமைப்படுத்துவதைக் குறித்தும் அப்போஸ்தலர் பேசுகிறார். 'மகிமை' என்பது ஆத்துமாவின் மிக உன்னத நிலையையும், 'உபத்திரவங்கள்' பாடுகளின் மிக ஆழமான நிலையையும் குறிக்கின்றன. எனவே ஆழமானதும், தாழ்ந்ததுமான நிலைகளில் வரும்போது அவற்றை உயரிய பரம ஆவியோடு சந்திக்க வேண்டுமென போதிக்கப்படுகிறோம். மறுரூப மலையின் அனுபவத்திலிருந்து இறங்கி வந்து பாடுபடும் உலகிலிருந்து சாத்தானுடைய வல்லமையைத் துரத்துவதற்கு ஈடானது.

ஆம், கிறிஸ்துவின் பாடுகளைப் பார்க்கிறோம். அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை அவரது மகிமையின் வாழ்வுக்கு நம்மை உயர்த்த உதவி செய்கிறது. அதுபோல நாமும் பிறரது வாழ்வில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவோம்.

**நவம்பர் மாத உபவாச ஜெபம்**

Heart cry for Holy Spirit Revival

**எழுப்புதலுக்காக இதய கதறல் 2018**

(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **17.11.2018**
3-வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை

இடம் : **பிலதெல்பியா சபை**
34, வசந்தா நகர்,
உழவர் சந்தை எதிர்புறம்,
கோயம்பத்தூர்

தொடர்பு : பாஸ்டர் **K. எஸ்றா ஆபிரகாம்**
மொபைல் : 80567 00100

## அறிவுக்கெட்டாத கிறிஸ்துவின் அன்பு

***The love of Christ, which passeth knowledge***

F.B. Meyer (1847-1929)

அறிவுக்கெட்டாத அந்த அன்பு - எபேசி.3:19.

சூரியன் ஒரு மின்மினிப்பூச்சிக்கு ஒளி கொடுப்பது போலவும், ஒரு சிறிய மலர்ச்செடிக்கு ஆமஸான் நதி நீர்ப் பாய்ச்சுவது போலவும் கிறிஸ்துவின் இதயத்திலிருந்து அன்பு வெளிப்படுகிறது. அளவுக்கடங்காத கொள்ளளவு கொண்ட தேவன் தமது இரக்கத்தாலும் மனஉருக்கத்தாலும் தாழ்ந்தவர்களும், களைப்படைந்தவர்களும், பாவிகளும், தகுதியற்றவர்களுமாகிய மனிதரை முழு பாரத்தோடும் சாந்தத்தோடு நேசிக்கிறார். இது அறிவுக்கெட்டாதது ஆயினும் நாம் இதை அறிய வேண்டும்.

நீங்கள் இதை உணராமலிருக்கலாம், ஆனால் விசுவாசித்தே ஆகவேண்டும். நீங்கள் பிரதிபலிக்காமலிருந்தாலும் அது மாறுவதில்லை. பூமி மேகங்களுக்குள்ளே மறைந்துவிடலாம், ஆயினும் அது சூரிய ஒளியை பாதிப்பதில்லை. நீங்கள் களைப்போடு, பாவபாரத்தோடு உதவியற்ற நிலையிலிருந்தாலும் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் தேவன் தமது அன்பின் வெள்ளத்தை நம் மீது பாயச் செய்கிறார். இந்த செயல் நமது தனிமை, மனச்சோர்பு, பயம் ஆகியவற்றை அறவே அகற்றிவிடும்.

### அறிவுக்கெட்டாத தேவ அன்பை நாம் அறிய வேண்டும்

குடிபோகிற ஒருவன் அனேக நிலத்தை வாங்கினாலும் அதன் ஒரு சிறு பகுதியை மட்டுமே நன்கு அறிந்து பயன்படுத்தத் தொடங்குவான். காலஞ் செல்லச்செல்ல அவன் அதன் எல்லையைப் பெரிதாக்குவான்.

தேவனுடைய அன்பின் கண்டத்தில் குடியிருப்பவர்கள் நாம். அதின் ஒரு பகுதியை மட்டுமே நாம் அறிவோம். ஆனால் அதன் ஐசுவரியத்தின் திரட்சியை நாம் அறிய முடிவதில்லை. ஏனென்றால் அது எல்லையற்றது. ஆயினும் இந்த அன்பினை அறிந்து ருசிக்க நாம் தொடருவோம்.

வாழ்வில் சோர்ந்து போனவர்கள் 'தேவன் என்னை நேசிக்கிறார் என்பதை நான் எண்ணிப் பார்க்க முடியாது' என்று கூறலாம். தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம் 1 யோவா.4:16. மறக்க வேண்டாம்.

நாம் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்த்தால் அவரது அன்பு நம்மைவிட்டு ஒருபோதும் விலகியதில்லை என்று கண்டுகொள்வோம்.

## பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக

***Bring children up in the training and admonition of the Lord***

J.C.Ryle

"பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக" எபே.6:4.

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" நீதி.22:6

### அவர்கள் நடக்க வேண்டிய வழி

அவர்கள் நடக்க வேண்டிய வழியில் நடக்க பயிற்சிக்க வேண்டும். அவர்கள் விரும்பும் பாதையிலல்ல.

பிள்ளைகள் தீமையான காரியத்தில் பிடிவாதமாயிருப்பவர்கள். எனவே அவர்களைத் தெரிந்தெடுக்க அனுமதித்தால் அவர்கள் தவறானவைகளையே தெரிந்து கொள்வார்கள்.

ஒரு பிள்ளை நெட்டையாகவோ, குட்டையாகவோ அல்லது பெலவீனமாகவோ பெலனாகவோ அல்லது ஞானமுள்ளதாகவோ ஞானமற்றதாகவோ வளரலாம். இதை நிர்ணயிக்க முடியாது. ஆனால் இது பாவ இருதயத்தை உடையது என்பது நிச்சயம். 'பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்' நீதி.22:15. "தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்" நீதி.29:15.

எல்லா பிள்ளைகளோடு ஞானமாய் நடந்து கொள்கிறவர்கள் அவனுடைய சித்தத்திற்கு அவனை விடக்கூடாது. அவனது உடலுக்கும், மனதிற்கும், ஆத்துமாவிற்கும் எது நல்லது என்று அவன் அறியான். எனவே எதை உண்ண வேண்டும், எதைக் குடிக்க வேண்டும், எப்படி உடுத்திக்கொள்ள வேண்டும் என்பவைகளில் நீங்களே தீர்மானம் எடுக்க வேண்டும். வேதத்தின் அடிப்படையில் சரியான பாதையில் நடத்துவது அவசியம்.

கிறிஸ்தவ பயிற்சியில் இந்த முதல் தத்துவத்தைக் கடைபிடியுங்கள். பிள்ளையின் மனதில் முதலாவது தோன்றுவது சுயசித்தம். உங்கள் முதல் படி அதைக் கட்டுப்படுத்துவதாகும்.

### எல்லா உருக்கத்தோடும் அன்போடும் பொறுமையோடும்

பிள்ளைகளை மனதுருக்கத்தோடும், அன்போடும், பொறுமையோடும் நடத்த வேண்டும்.

அதற்காக அவர்களை இளக்காரமாக விடும்படியாக நான் கூறாமல் நீங்கள் அவர்களை நேசிப்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகிறேன். உங்கள் எல்லா நடத்தையிலும் அன்பு இழையோட வேண்டும். இரக்கம், பொறுமை, சகிப்புத்தன்மை, உருக்கம், அவர்களது பிரச்சனைகளில் பங்குகொள்ளுதல், அவர்களின் சந்தோஷங்களில் ஈடுபடுதல் போன்றவைகள் மூலம் அவர்களைக் கவர்ந்து கொள்ளலாம்.

மனக்கடினம், கண்டிப்பு ஆகியவை பிள்ளைகளைக் குளிரச்செய்து

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்வாங்கச் செய்யும். அவர்கள் இருதயம் அடைக்கப்பட்டுவிடுவதால் அதைத் திறக்கக் கடினமாகிவிடும். எனவே நீங்கள் அவர்களை நேசித்து சந்தோஷப்படுத்த விரும்புகிறீர்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும். தண்டனை அவர்களுடைய நன்மைக்காகவே அளிக்கப்படுகிறது என்றும் நீங்கள் உங்கள் இருதய இரத்தத்தை அவர்களது ஆத்மா செழிப்படைய அளிக்கிறீர்களென்றும் அவர்கள் உணர வேண்டும்.

வெற்றியுள்ள பயிற்சிக்கு அன்பு ஒரு சிறந்த இரகசியம். கோபமும், கடினகுணமும் பயப்படுத்தக்கூடியவை. ஆனால் நீங்கள் செய்வது சரி என்று பிள்ளை ஒப்புக்கொள்ளாது. இவ்வாறு அடிக்கடி கோபம் கொள்வதால் பிள்ளைக்கு பெற்றோர் மீதான கனம் குன்றிவிடும். 1 சாமு.20:30-ல் நாம் படிப்பது போல ஒரு தந்தை சவுலைப் போல மகனாகிய யோனத்தானிடம் பேசினால் மகனுடைய மனதை தந்தை தாக்கமடையச் செய்ய முடியாது.

உங்கள் பிள்ளையின் அன்பை பெற்றுக்கொள்ள முயற்சிப்பது அவசியம். பிள்ளைகளை பயப்படுத்துவது ஆபத்து. பயம் திறந்த மனதிற்கு முடிவு கட்டிவிடும். அது ஒளிப்பதற்கு நடத்தும். பயம் மாய்மாலத்தை விதைக்கும். அதனால் அதிகமான பொய்கள் எழும்பும். அதனால் கொலோ.3:21 "பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்" என்று எச்சரிக்கிறது.

### தேவ வசனத்தை உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள்

வேதவசன அறிவில் உங்கள் பிள்ளைகள் தேர்ச்சியடையட்டும். பிள்ளைகள் வேதபுஸ்தகத்தை நேசிக்கச் செய்ய உங்களால் முடியாது. தூய ஆவியானவர் மட்டுமே வேதவசனத்தில் மகிழ்ச்சியடையும் மனதைத் தரமுடியும். ஆனால் உங்கள் பிள்ளைகளுக்கு வேதபுத்தகத்தோடுள்ள தொடர்பை சிறுபிராயத்திலேயே ஏற்படுத்த வேண்டும்.

மார்க்கத்தின் தெளிவான பார்வைக்கு வேதபுத்தகத்தை நன்கு படிப்பது அஸ்திபாரமாயிருக்கும். வேதத்தை நன்கு படிக்கிறவர்கள் தடுமாறுவதில்லை. அவர்கள் புதிய தத்துவங்களாகிய காற்றினால் அலசடிப்படுவதில்லை. வேதவசனத்தை முதன்மைப் படுத்தாத பயிற்சிகள் பாதுகாப்பற்றவை. **நீங்கள் உங்கள் பிள்ளைகளை நேசித்தால் அவர்கள் ஆத்துமாக்களுக்கு வேதபுத்தகத்தைக் கொண்டு பயிற்சி கொடுங்கள்.** மற்ற புத்தகங்கள் இரண்டாவதாயிருக்கட்டும். வேதவசனத்தில் அவர்கள் பெலப்பட வேண்டும். அப்போது தேவன் அவர்களை கனம் பண்ணுவார்.

பயபக்தியோடு அவர்கள் வேதத்தை வாசிக்கச் செய்யுங்கள். அது மனிதருடைய வார்த்தையல்ல, ஆனால் சத்தியமானது. அது தேவனுடைய வார்த்தை, தேவ ஆவியினால் எழுதப்பட்டது என போதியுங்கள். அனைத்து வசனங்களும் உண்மையும், பயன் தருபவைகளும் இரட்சிப்புக்கேதுவான ஞானம் தருபவைகளுமாயிருக்கின்றன.

அவர்கள் வேதவசனத்தை ஒழுங்காக வாசிக்கிறார்களா? என கவனிக்க வேண்டும். அது அவர்கள் ஆத்துமாவின் அனுதின அப்பம் என்றும் ஆரோக்கியத்திற்கு முக்கியமானது என்றும் போதிக்க வேண்டும். அனேக பாவங்கள் இதை வாசிப்பதால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

முழுமையாக வேதபுஸ்தகத்தை வாசிக்கிறார்களா என்றும் கவனிக்க வேண்டும். அதிலுள்ள முக்கிய போதனைகளை அவர்கள் புரிந்து கொள்ள முடியாது என்று எண்ண வேண்டாம். நாம் எண்ணுவதை விட பிள்ளைகள் அவற்றை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

பாவம் என்பது குற்றம் என்றும் அதன் விளைவுகள், அதன் வலிமை, கேடு ஆகியவற்றைப் பற்றி சொல்லிக் கொடுங்கள். அவர்கள் சற்றேனும் புரிந்து கொள்ளட்டும்.

இயேசுக் கிறிஸ்து அவரது பணியால் வந்த இரட்சிப்பு பாவ நிவாரணம், சிலுவை, இரத்தம், பலி, மன்றாட்டு ஆகியவற்றை அறிவியுங்கள்.

மனித இருதயத்தில் தூய ஆவியானவர் செயல்படுவதையும், அவர் எப்படி மாற்றுகிறார், புதுப்பித்து பரிசுத்தப்படுத்துகிறார் என்பதையும் விளக்கிக் கூறுங்கள்.

அவர்கள் இருதயத்தை வேத வசனத்தால் நிரப்புங்கள். வசனம் அவர்களில் அதிகமாய் வாசம் பண்ணட்டும். **சிறுவயதிலேயே முழு வேதாகமத்தையும் படிக்கக் கொடுங்கள்.**

### ஜெபப் பழக்கம்

பிள்ளைகளை ஜெபிக்கப் பழக்குங்கள். **ஆவிக்குரிய செழிப்பிற்கு ஜெபம் மிகப்பெரிய இரகசியம்.** அதிகமாக ஜெபிக்கும்போது ஆத்துமா மழையைக் கண்ட புல்லைப் போல செழிக்கும். ஜெபம் குறைந்தால் வளர்ச்சி குன்றி செயலற்று விடும். ஒரு வளரும் கிறிஸ்தவன், முன்னேறும் கிறிஸ்தவன், உறுதியான கிறிஸ்தவன், செழித்து வளரும் கிறிஸ்த வன் நன்றாக ஜெபிப்பான். அவன் அதிகமாகக் கேட்டு அதிகமாகப் பெற்றுக் கொள்கிறான். ஆண்டவரிடம் எப்போதும் பேசுவதால் எப்படி செயல்பட வேண்டும் என்பதை அறிவான்.

தேவன் நமது கரங்களில் அளித்திருக்கும் மிகவும் வல்லமையான எந்திரம் ஜெபம் என்றால் மிகையல்ல. எந்தக் கஷ்டத்திலும் அது சிறந்த ஆயுதமாகவும் துன்பங்களிலெல்லாம் நிச்சயமான நிவாரணமாகவுமிருக்கிறது. **வாக்குத்தத்தங்களின் பொக்கிஷசாலையைத் திறக்கும் திறவுகோலும் தேவையின் காலங்களில் உதவி தேடித் தரும் கரமாகவும் அது காணப்படுகிறது.** நமது தேவைகளில் நாம் இந்த வெள்ளி எக்காளத்தை தொனிக்கக் கட்டளை பெற்றிருக்கிறோம். அன்புள்ள ஒரு தாயார் குழந்தையின் சத்தத்திற்கு செவி சாய்ப்பது போல ஜெபமாகிய நமது அழுகை கேட்கப்படுவதாக வாக்குப் பெற்றிருக்கிறோம்.

அன்பான பெற்றோரே, உங்கள் பிள்ளைகளை நீங்கள் நேசித்தால் உங்களாலியன்றமட்டும் அவர்களை ஜெபிக்கப் பழக்குங்கள். எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்ன சொல்ல வேண்டுமென்று போதியுங்கள். தொடர்ந்து ஜெபிக்கவும் தவறாமல் ஜெபிக்கவும் வழிநடத்துங்கள். உங்கள் தவறால் அவர்கள் ஜெபிக்காமலிருக்கக் கூடாது.

மார்க்க நெறியின் முதல்படி ஜெபம். அவன் எழுத வாசிக்க கற்றுக் கொள்ளுமுன்பே தாயாரினருகில் முழங்காற்படியிட்டு அவள் சொல்லுகிறபடி ஜெபிக்கவும் துதிக்கவும் கூடும். எந்தச் செயலுக்கு முன்பாகவும் ஜெபிப்பது அவசியம். அவர்கள் அதனை ஆத்திரமாகவும் கவலையீனமாகவும் செய்யாதபடி கவனியுங்கள். அவர்கள் தனியாயிருக்கும்போதும் ஜெபத்தில் கவனமாயிருக்க வழிநடத்துங்கள். ஒரு தாயார் இதை மிக முக்கியமானதாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் கரமும் கண்களும் இதற்குப் பொறுப்பாயிருக்க வேண்டும். உங்கள் பிள்ளை ஜெபிக்கவில்லையென்றால் நீங்கள்தான் குற்றவாளிகள்.

நீங்கள் உங்கள் பிள்ளையை நேசித்தால் இந்த ஆரம்ப காலத்தில் ஜெபப்பழக்கத்தை உருவாக்கிவிடுங்கள். அது வளர்ந்து பெருகட்டும். எதிலே பயிற்சி தராவிட்டாலும் ஜெபம் பண்ணப் பயிற்சி அளியுங்கள்.

## கண்பார்வையற்ற சாங் : மஞ்சூரியாவின் இரத்தசாட்சி

***Blind Chang : Martyr of Manchuria - Part 2*** (பகுதி 2)

Rosalind Goforth

ஞானஸ்நானம் எடுத்து 5 ஆண்டுகள் வரை தமது வீட்டுப்பகுதியில் தொடர்ந்து சுவிசேஷத்தை சாங் அறிவித்தார். கைக்கோலின் உதவியால் கிராமம் கிராமமாகச் சென்றார். சில அயலார் அவருக்குப் பைத்தியம் என பரிகசித்தனர். ஆனால் பல ஆண்டுகள் வேதத்தைப் படித்தும் புரிந்து கொள்ளாத ஒரு விவசாயி அவருக்காகப் பேசி தாம் வேதவசனங்களை அறியவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இந்த விவசாயியும் இன்னும் சிலரும் விசுவாசிகளானார்கள். 1892-ம் ஆண்டுக்குள் 170 பேர் ஸ்நானம் பெற்று திருச்சபையில் சேர்க்கப்பட்டனர். அனேக இடங்களில் கிறிஸ்தவ ஆராதனைகள் நடத்தப் பட்டன. பின்பு 7 சிற்றாலயங்களும் எழுப்பப்பட்டன.

### வேதவசனத்தை மனப்பாடம் செய்தல்

சாங் மிகவும் நினைவுத் திறனுடையவர். புதிய ஏற்பாடு முழுவதையும் அவர் மனப்பாடம் செய்ததோடு, பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளையும் பாராயணம் செய்தார். பீக்கிங்கிலுள்ள பார்வையற்றோர் பள்ளியை இருமுறை சந்திக்க வாய்ப்பைப் பெற்றதால் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டார். இல்லாவிடில் வேதபுத்தகம் அவருக்கு முத்திரையிடப்பட்ட புத்தகமாகவே இருந்திருக்கும். கடைசியாக பீக்கிங்கை சந்தித்துவிட்டு மஞ்சூரியா திரும்பிய போது தன்னோடு பார்வையற்றோர் பயன்படுத்தும் ஒரு வேதபகுதியைக் கொண்டு வந்தார். சில நாட்கள் அதனை சென்ற இடமெல்லாம் கொண்டு சென்றார். அவர் விரல்களால் தொட்டு வாசிப்பதை

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ட மக்கள் ஆச்சரியத்துடன் திரளாகக் கூடினர்.

### ஆரம்ப ஊழியம்

அடுத்த 12 ஆண்டுகள் அதிக காலங்கள் வீட்டை விட்டு தூரமான இடங்களில் ஊழியம் செய்தார். அதிகத் தேவையிலிருப்போர், சுவிசேஷத்தை இதுவரை அறியாதவர்கள் போன்றவர்களை சந்திக்க அவர் தூண்டப்பட்டார். வாழ்வின் பெரும்பாலான பகுதியிலும் தனியாக ஊன்றுகோலின் உதவியுடன் பயணித்தார். சிலவேளைகளில் ஒரு சிறுவனோ அல்லது ஒரு பெரியவரோ வழி நடத்தினர். தான் ஒரு காலத்தில் வாழ்ந்தது போன்ற பாவிகள் இயேசுவை அறிந்து கொள்ள கரடுமுரடானதும், ஆபத்து நிறைந்ததுமான பாதைகளைக் கடந்து சென்றார். இவ்வாறு வருடா வருடம் குளிரிலும் வெயிலிலும் அவர் உழைத்தார்.

ஒரு புதிய பகுதிக்கு அவர் சென்றபோது அவர் கசப்பான அனுபவங்களைப் பெற்றார். பிள்ளைகள் அவர் மீது செழி, செங்கல், சாப வார்த்தைகளை அள்ளிவீசத் தூண்டப்பட்டனர். மக்கள் வாசலுக்கு வாசல் அவரைத் துரத்தினர். நாய்களும் அவரைப் பின்தொடர்ந்தன. ஆனால் இவை ஒன்றையும் அவர் சட்டை செய்யவில்லை. தன் உயிரையும் மதியாமல் திரும்பவும் அதே இடத்தில் வந்து அற்புதமான ஆத்தும இரட்சிப்புக்கேற்ற, ஜீவனளிக்கும் செய்தியைக் கூறினார். பொதுமக்களின் அபிப்பிராயம் மாறியது. கதவுகள் திறந்தன. ஆண்கள் வயல்களில் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது வீடுகளில் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் வேதபோதனை கொடுக்கும் வாய்ப்பு கிடைத்தது. மாலை வேளைகளில் ஆண்கள் வேனிற்காலத்தில் மரநிழல்களிலும் குளிர்காலங்களில் வீடுகளிலும் கூடி வந்தனர். தான் அறிந்த யாவற்றையும் சாங் அவர்களுக்கு எடுத்துக் கூறினார். அவருடைய ஒரே செய்தி சிலுவையிலறையப்பட்ட இயேசுவே.

அவருக்கு சம்பளமில்லை. ஆனால் மக்கள் மனம் உவந்து உதவி செய்தனர். பெண்கள் உணவு சமைத்துக் கொடுத்தும், ஆடைகளை சுத்தம் செய்தும், புதிய ஆடைகளைத் தைத்தும் உதவி செய்தனர். மனந்திரும்பிய சிலர் நல்ல தாலந்துகளை உடையவர்களாகவும், சபையில் தலைவர்களாயிருந்து நல்ல ஊழியம் செய்யக் கூடியவர்களுமாயிருந்தனர். அப்போது சாங் அவ்விடங்களை விட்டு பாடுகள் நிறைந்த இடங்களுக்குச் செல்வார், வெற்றியும் பெறுவார். "அவர் விளக்கைத் தூண்டி விட்டு கடந்து செல்பவர்" என்று அவரைக் குறித்து கூறப்பட்டது. ஆத்தும பாரம் நிறைந்தவராய் சந்தோஷமாக அவர் தேவ பணியினைத் தொடர்ந்தார்.

### பாடுகள்

1898-க்கு சில ஆண்டுகளுக்கு முன்னால் மிஷனெறிகளுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிரான மனநிலை சீனாவில் குறைந்தது. இந்தக் காலக் கட்டத்தில் ஏராளமானவர்கள் திருச் சபையில் சேர்ந்தனர். எந்த மிஷனெறியும் கிறிஸ்தவர்களும் எதிர்பாராத சூழலில் புயலுக்கு முன்னால் அமைதி நிலவியது. 1899 - 1900 ஆண்டுகளின் குளிர்காலங்கள் புயலின் காலங்களாக மாறிவிட்டன.

(தொடரும்)

# தெய்வீக வல்லமை

***Supernatural power***

J. Hudson Taylor

"...... தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையின் மகத்துவம்......." எபே.1:19.

தேவன் வல்லமையின் மிகப் பெரிய ஆதாரம். வல்லமை அவருடைய உடைமை. தமது சர்வ வல்ல சித்தத்தின் படி அவர் அதை விளங்கப்பண்ணுகிறார். நமது எதிரிகள் அனேகராகவும் சத்துவம் உடையவர்களாயும் இருந்தாலும் நமது தேவன் சர்வ வல்லவர். அவரிடமிருந்து நமது இரட்சிப்பும் போதுமான வைகளும் வருகின்றன. தானி.11:32-ன் படி தங்கள் தேவனை அறிந்திருக்கிறவர்கள் திடன் கொள்வார்கள்.

நாம் தெய்வீக ஜனம். நாம் தேவனால் மறுபடியும் பிறந்தவர்கள். நமக்கு இயற்கைக்கு மேலான ஒரு போராட்டமும் இயற்கைக்கு மேலான ஒரு போதகரும் உண்டு. இந்தப் போராட்டத்தில் நமது சேனாதிபதி இயற்கைக்கு மேலானவர். எனவே அவர் நம்மை சரியான பாதையில் நடத்தி வெற்றி தருவார்.

இரட்சகராகிய இயேசு பரத்துக் கேறிய சில நாட்களில் சீஷர்கள் மேல் தூய ஆவியானவர் ஊற்றப்பட்டார். அவர்கள் ஆவியால் நிரப்பப்பட்டு தேவனைத் துதித்தார்கள். பெந்தெகொஸ்தே நாளில் வல்லமையாய் செயல்பட்ட தேவன் இன்றும் ஜீவிக்கிறார்.

ஆனால் நாமோ பல்வேறுவிதமான வழிமுறைகளிலும் எந்திரங்களிலும், ஆதாரங்களிலும் அதிக கவனம் செலுத்திவிட்டு தெய்வீக வல்லமையையும், தூய ஆவியானவரின் நிரப்புதலையும் உதாசீனம் பண்ணுகிறோம். நாம் தூய ஆவியால் நிரப்பப்படும்படி கட்டளை பெற்றவர்கள். ஆனால் நாம் நிரப்பப்படாதபடி கீழ்ப்படியாமையிலும் பாவத்திலும் வாழுகிறோம். தேவன் எப்போதும் நம்மை தூய ஆவியால் நிரப்ப ஆயத்தமாயிருக்கிறார்.

# கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு

***By grace through faith***

Charles H. Spurgeon

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" எபே.2:8.

நமது இரட்சிப்புக்கு ஆதாரமாயிருப்பது தேவ கிருபை. தேவன் கிருபையுள்ளவராயிருப்பதால் பாவமனிதர் மன்னிக்கப்பட்டு, மாறுதலடைந்து, சுத்திகரிக்கப்பட்டு இரட்சிக்கப்படுகிறார்கள். இரட்சிப்பு அவர்களால் ஏற்பட முடியாது. அது எல்லையற்ற தேவ அன்பாலும், நற்குணத்தாலும், பரிதாபத்தாலும், உருக்கத்தாலும், இரக்கத்தாலும் கிடைக்கிறது.

தேவ கிருபையின் ஆழம் எவ்வளவு? யார் அதன் அகலத்தை அளக்கக்கூடும்? அது எல்லையற்றது. தேவன் அன்பாகவே இருக்கிறார் 1 யோ.4:8. தேவன் நற்குணம் நிறைந்தவர். எல்லையற்ற நற்குணமும், அன்பும் தேவத்துவத்தின் சாரமாயிருக்கிறது. அவர் கிருபை என்றுமுள்ளது. சங்.136:1. எனவே தான் மனிதர் நிர்மூலமாகவில்லை. "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே" புல.3:22. பாவிகள் தேவனிடம் வந்து மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இரட்சிப்பின் கால்வாய் விசுவாசம்; கிருபை அதன் ஊற்று. நமது வாழ்வு அவரை நோக்கிப் பார்ப்பதில் அடங்கியிருக்கிறது. விசுவாசத்தின் மூலம் எல்லாம் கூடும். ஆயினும் வல்லமை விசுவாசத்திலல்ல, தேவனில் காணப்படுகிறது. அவரை விசுவாசத்தால் சார்ந்து கொள்ள வேண்டும்.

விசுவாசத்தின் நீதி விசுவாசத்தின் மேன்மையல்ல. கிறிஸ்துவின் நீதியை விசுவாசம் பற்றிக்கொள்ள வேண்டும். ஆத்துமாவிலுள்ள சமாதானம் நமது விசுவாசத்தை தியானிப்பதிலிருந்து வருவதில்லை. நமக்கு சமாதானமாயிருக்கிற தேவனிடமிருந்து வருகிறது. அவரது வஸ்திரத் தொங்கலை விசுவாசம் தொடும்போது அவரிலிருந்து வல்லமை புறப்பட்டு நமது ஆத்துமாவை அடைகிறது.

விசுவாசத்தின் பலவீனம் நம்மை அழிப்பதில்லை. நடுங்குகிற ஒரு கரம் பொன்னாலான ஒரு வெகுமதியைப் பெறமுடியும். அதுபோல கடுகளவு விசுவாசம் நமக்கிருந்தால் கர்த்தருடைய இரட்சிப்பை நாம் பெறமுடியும். இந்த வலிமை நமது விசுவாசத்திலல்ல தேவ கிருபையில் அடங்கியுள்ளது. தேவனையே நோக்கிப் பாருங்கள். உங்கள் பார்வை உங்கள் சொந்தப் பார்வையை விட்டு அகல வேண்டும். இயேசுவைத் தவிர வேறு எதையும் நோக்கிப் பார்க்கலாகாது. அவரிடத்திலுள்ள கிருபைதான் நமக்குக் கிடைக்க வேண்டும்.

### எழுப்புதலுக்காக தேவக் கதறல், செப்டம்பர்

ஏ.ஜி.சபை, தேனி - 08.09.2018

தேவனுடைய கிருபையால் 07.09.18 இரவு 8 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 2 மணிக்கு போய் சேர்ந்தோம். சபையின் போதகருடைய மகன் வரவேற்று இளைப்பாறுவதற்கு சிற்றாலயத்தை ஒழுங்கு செய்து தந்தார்கள். நாங்கள் இளைப்பாறி 8 மணிக்கு உபவாச ஜெபத்திற்கு ஆயத்தமாகி கொண்டிருந்தோம். 10 மணி உபவாச ஜெபத்திற்கு, ஜனங்கள் 9 மணிக்கே வரத் தொடங்கினார்கள். சரியாக 10 மணிக்கு சபையின் போதகர் உபவாச ஜெபத்தை துவக்கி வைத்தார்கள். அதன்பிறகு சகோ. பிரகாஷ் அவர்கள் 11 மணி வரை பாடல் மற்றும் ஆராதனை வேளையை சிறப்பாக நடத்தினார்கள். தொடர்ந்து வழக்கம்போல் 1. தரிசன செய்தி,

(எழுப்புதலுக்காக இதயக் கதறல் .........., தொடர்ச்சி)

2.தேசத்திற்கான ஜெபம், 3. தேசத்தை குறித்த தரிசன சவால் 4. இறுதி செய்தி, 5. விசேஷ ஜெபம் என்று உபவாச ஜெபம் மிக ஆசீர்வாதமாக நடைபெற்றது. அநேக தேனி மாவட்ட ஊழியர்கள், மற்றும் சபை விசுவாசிகள் பங்கு பெற்று இணைந்து ஜெபித்தார்கள். தேவனுக்கே மகிமை. உபவாச ஜெபத்திற்கு பின்பு அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. மாலை 6 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 2 மணிக்கு நாகர்கோவில் வந்து சேர்ந்தோம். இந்த உபவாச ஜெபத்தை நேர்த்தியாக ஒழுங்கு செய்த தலைமை போதகர் பாஸ்டர் தாசையா அவர்களையும், உதவிப் போதகர்கள் மற்றும் குடும்பத்தினரை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

கர்த்தருக்கு சித்தமானால் அக்டோபர் மாதம் 16-ம் தேதி அந்தமான் செல்ல ஆயத்தமாகி கொண்டிருக்கிறோம். தேவன் பிரயாணங்களை வாய்க்க பண்ண, தேவைகள் சந்திக்கப் பட, அந்தமானில் சூழ்நிலைகள் அனுகூலமாய் இருக்க, தேவன் உபவாச ஜெபத்தை ஆசீர்வதிக்க ஜெபிக்கும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.

**W. சாமுவேல் ஃபின்னி**

(2-ம் பக்க தொடர்ச்சி)

## எழுப்புதலின் திறவுகோல்

திரள் திரளாய் மக்கள் இரட்சிக்கப்படுவதன் திறவுகோல்! பெந்தெகொஸ்தின் திறவுகோல்! தேவ மக்களின் கைகளில்தான் இருக்கிறது! இன்று நமது சபைகளின் மிகப்பெரிய தேவை ஆத்தும பாரமும் உடைந்த உள்ளமும் உடையவர்களான விசுவாசிகளே. சிறந்த பிரசங்கிகளல்ல. பெரிய பிரச்சாரமல்ல. இனிய சங்கீதமுமல்ல; இவை எல்லாவற்றையும் தேவன் பயன்படுத்தக்கூடும்.

இன்று நமது சபைகளில், அழுகையோடும் அங்கலாய்ப்போடும் தேவ சமூகத்தில் முகங்குப்புற விழுந்து, வேதனையோடும் வியாகுலத்தோடும் வேண்டிக்கொள்வதே இன்றியமையாத அவசியமாயிருக்கிறது! தேவன் இரங்கித் தலையிடுவதால் நாட்டில் நீதி நிலை நாட்டப்படத்தக்கதாக, இரவு பகலாய் இடைவிடாமல், வாஞ்சையோடும் கண்ணீரோடும் வேண்டிக் கொள்ளுகிறவர்களே இன்று நமது சபைகளுக்குத் தேவை.

ஜெபிக்கும் தேவ மக்களின் கண்ணீர் வெள்ளத்தாலன்றி உலகத்தில் அதிகமாய்ப்பரம்பிய ஒரு எழுப்புதலையும் நான் அறிவதில்லை. கண்ணீருக்கும் தேவ கிருபைக்கும் உள்ள சம்பந்தம் எதுவோ, நான் அறியேன்: அழுது கதறி, ஆத்துமாவையே அவர் பாதத்தில் ஊற்றி, ஆண்டவரே எழுப்புதலைத் தாரும் அல்லது நாங்கள் இறந்தே போவோம் என்று சொல்லுமளவுக்கு நம்மில் சிலரது உள்ளங்களாவது உடையுமானால் அப்போது எழுப்புதல் ஏற்படும்.

தேவனிடமிருந்து சகல நன்மைகளையும் பெற்றுக்கொண்டு அவருக்கு எதுவுமே கொடாதிருக்கும் சுயநல கிறிஸ்தவத்தை அடியோடு அகற்றி விட ஆயத்தமாயிருக்கிறாயா? அதற்குப் பதிலாக தீரமும், தைரியமும் வெற்றியுமுள்ள ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை அடைந்து கொள்ள ஆசிக்கிறாயா?

கிறிஸ்து நமக்காகத் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்ததுபோல நாமும் நமது ஜீவனை அவருக்காக அர்ப்பணிக்க தேவன் தாமே நமக்கு தேவையான கிருபையை அளிப்பாராக.

### எழுப்புதலுக்காக ஜெபிக்க 100 பேர்–Revive 100

சங்கீதம் 85:6 உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?

Wilt thou not **revive us** again; that thy people may rejoice in thee?

நீங்கள் செய்ய வேண்டியது, சங்கீதக்காரனோடு சேர்ந்து ஜெபிக்க வேண்டியது மாத்திரமே. இதற்கு கட்டணம் எதுவும் கிடையாது; ஆனால் நீங்கள் கட்டாயம் ஜெபிக்க வேண்டும்!

ஏற்கெனவே ஜெபிக்கிற 27 பேர்களின் முகவரிகளை கீழே அச்சிடுகிறேன். இன்னமும் 73 பேர் தேவை. இந்த பத்திரிகையை **படித்த உடனே** தயவு செய்து எங்களுக்கு போன் பண்ணுங்கள். உங்கள் பத்திரிகை பதிவு எண், பெயர், தொலைபேசி எண்ணை மாத்திரம் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| 1. CN 00536 | 2. KK 04765 | 3. MD 01090 |
| 4. VN 00980 | 5. TN 02014 | 6. NI 01279 |
| 7. NC 01088 | 8. MD 00661 | 9. VN 00947 |
| 10. CN 02362 | 11. TJ 00275 | 12. CN 01915 |
| 13. TN 01607 | 14. KK 03974 | 15.KK 00493 |
| 16. SA 01567 | 17. CN 01446 | 18. NC 00483 |
| 19. CN 02660 | 20. KK 04774 | 21. NC 01029 |
| 22. CN 02001 | 23. CB 00887 | 24. CN 02018 |
| 25. NC 01148 | 26. ER 00566 | 27. CN 02880 |

அந்தமான் உபவாச ஜெப அட்டைகள் அச்சிடப்பட்ட உடனேயே ஜெபிக்கிற 27 பேர்களுக்கும் அனுப்பி வைத்தோம். ஆண்டவருக்குச் சித்தமானால் ஜெபிக்க விரும்பும் அத்தனை பேர்களுக்கும் பிலதெல்பியா சபை, கோவை, வடக்கன்குளம் - நெல்லை மாவட்டம் ஜெப அட்டைகள் இரண்டையும் சேர்த்து தனி தபாலில் உங்களுக்கு அனுப்பி வைப்போம்.

வருகையின் தூதன் பத்திரிகைக்கு சந்தா கிடையாது. இந்த ஊழியத்தின் மாத தேவை ஒரு லட்சம் ரூபாய் தேவனால் சந்திக்கப்பட தயவாய் ஜெபியுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

ஆசிரியர் : 04652 403295
உதவி : 94897 40295
ஜெப உதவி : 94980 30295
அலுவலகம் : 95432 21008
காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)

## பத்திரிகை செய்திகள்

### அழுவதற்கு கண்ணீர் இல்லை ஆறுதல்படுத்த யாரால் முடியும்?

நாங்கள் சென்னையில் தங்கி படித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால்..... எங்களுடைய சொந்தங்கள் அங்கே அழிந்து கொண்டிருக்கிறார்கள். மாநிலமே மழை வெள்ளத்தில் மூழ்கிப் போய்விட்டது. எந்த தகவலும் இல்லை. என்ன ஆனார்கள் என்றும் தெரியவில்லை. கர்த்தர்தான் எங்களுக்கு பதில் தரவேண்டும். தயவு செய்து ஜெபிப்பீர்களா? என்று ஆகஸ்ட் 16–ம் தேதி இரு சகோதரிகள் கண்ணீர் மல்க என்னிடத்தில் வந்து சபையில் கதறியது. இன்னும் என் இதயத்தை விட்டு அகலவில்லை! ஆம். அண்டை மாநிலமான கேரளா, மழை வெள்ளத்தில் சிக்கி, பேரழிவை சந்தித்திருக்கிறது. மொத்தமுள்ள 14 மாவட்டங்களும் நிலைகுலைந்து போயிருக்கின்றன. 1924–ல் இங்கு, 3368 மி.மீ மழை பொழிந்ததால், மாநிலம் முழுவதும் நீரில் மூழ்கியது. அப்பொழுது 100 பேர் மரணம் அடைந்ததாக கூறப்படுகிறது. இப்பொழுது பெய்த தென்மேற்கு பருவமழையின் மூலம் ஜூன் 1 முதல் ஆகஸ்ட் 15 வரை 2,087 மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது. இப்பெருமழையால், 215 நிலச்சரிவுகள், 800 கி.மீ சாலை போக்குவரத்து, 22 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. மாநிலம் முழுவதும் சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு சேதமடைந்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 300–க்கும் மேற்பட்டோர் மரணமடைந்திருப்பதாக தெரிவிக்கின்றனர். 500–க்கும் அதிகமானோர் மாயமானதாக அறிவிக்கப்பட்டது. 2.23 லட்சம் மக்கள், வீடுகள் இழந்து 1,568 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் கரைந்து போனாலும், இவற்றால் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள வடு மறைய, பல மாதங்கள் அல்லது சில வருடங்கள் கூட ஆகலாம். இவர்களுடைய இப்போதைய தேவை, ஆறுதலும், தேறுதலுமே. ஆம் அன்பு தேவபிள்ளைகளே, இவ்வாறான இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ள நம் தேசத்தின் மக்களுக்காக, நாம் மனமிரங்க வேண்டிய நேரமிது. இழந்தவைகளை பெற்றுக்கொண்டு, இயல்பு நிலைக்கு இவர்கள் திரும்ப, இயேசுவை நோக்கி பிரார்த்திக்க வேண்டிய அவசர நிலைக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆம், வலியைச் சொல்ல வார்த்தைகள் இல்லை? ஆனால்.... அவர்கள் செல்ல வேண்டிய எதிர்காலத்தின் வழியைச் சொல்ல, நாம் நம் தேவனை பணிக்கலாமே! பாதிக்கப்பட்ட கேரள மக்களுக்கு உதவுங்கள்.

**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To